பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 02 | புதன்கிழமை | 18.09.2024 | அதிர்வு 047

## சஜித்தையும் அநுரவையும் தும்புத்தடியால் ஓட ஓட அடித்துத் துரத்துங்கள்!

**மன்னாரில் ரணில் வலியுறுத்து**

(விரிவான செய்தி 17 ஆம் பக்கத்தில்)



# தமிழர்கள் திரண்டு ஒற்றுமையாக சஜித்துக்கு வாக்களிக்க வேண்டும்

## யாழ். நல்லூர் கிட்டு பூங்கா பரப்புரைக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் எம்.பி. சுமந்திரன் கோரிக்கை



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு ஒற்றுமையாகச் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன்கோரிக்கை விடுத்தார்.

06

### வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய

## சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவில் கடலில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

### மற்றொருவர் மாயம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவில் கடலில் நீராடியவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். மற்றொருவர்

06




இலங்கைத் தமிழரசுக் கட்சி முழுக் குழப்பத்தில் ஆழ்ந்து கிடக்கின்றது – அதன் தலைவர் மாவை சேனாதிராஜா மாதிரி.

நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களும், அடுத்த முறையும் பொதுத்தேர்தலில் குதிப்பதற்கு கண் வைத்திருப்பவர்களுமே கட்சியின் மத்திய குழுவின் முடிவை மீறி தம்பாட்டில் பகிரங்கமாகச் செயல்படத் தொடங்கி உள்ளனர்.

மாவை சேனாதிராஜா, சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலாநாதன், சிறிநேசன், யோகேஸ்வரன், அரியநேத்திரன், சரவணபவன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் சிலரும் இந்தப் பட்டியலில் அடக்கம்.

வரும் கிழமையில்

06




# சஜித்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். நல்லூரில் திரண்ட மக்கள்

(எஸ்.நிதர்ஷன்)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்த பிரசாரக் கூட்டம் யாழ். நல்லூர் கிட்டுபூங்காவில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்

தொடர்ச்சி▼









# சஜித்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். நல்லூரில் திரண்ட மக்கள்

தொடர்ச்சி▲

திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்துகொண்டனர்.















# மன்னாரில் சார்ள்ஸ் எம்.பியை வீடு தேடிச் சென்று சந்தித்த ரணில்

## தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் ஆதரவு தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

மன்னாரில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 'ரணிலால் இயலும்' வெற்றிப் பேரணியில் இணைந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்டத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சார்ள்ஸ் நிர்மலநாதனை மன்னார் – தாழ்வுபாடுவில் உள்ள அவரின் இல்லத்தில் சந்தித்தார்.

இதன்போது ஜனாதிபதியை சார்ள்ஸ் நிர்மலநாதன் வரவேற்றார். இருவரும் சமகால அரசியல் விவகாரங்கள் குறித்து சிறு உரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட

தொடர்ச்சி▼














# மன்னாரில் சார்ள்ஸ் எம்.பியை வீடு தேடிச் சென்று சந்தித்த ரணில்

## தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் ஆதரவு தெரிவிப்பு

தொடர்ச்சி▲

உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காகத் தம்மை அர்ப்பணிப்பதாக அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனிடம் வினவியபோது, ”இது ஜனாதிபதியுடன் ஒரு மரியாதையின் நிமித்தமான சந்திப்பு. ஜனாதிபதித் தேர்தலில் ஒட்டுமொத்த மன்னார் மக்கள் மற்றும் ஆதரவாளர்களின் முடிவே எனது முடிவு. மக்கள் யார் பக்கமோ அவர்களின் பக்கமே நானும் நிற்பேன்.” – என்றார்.













## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றம் கலைக்கப்படும் சாத்தியங்கள் அதிகம் உண்டு. அப்படி நடந்தால், தமிழரசுக் கட்சியின் – அதன் மத்திய குழுவின் – முடிவை மீறி தம்பாட்டில் நடக்கும் மாவை உட்பட்ட அணியினரை கட்சியின் மத்திய குழு எப்படி கையாளும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சுமந்திரன், சாணக்கியனை ஒதுக்குகிறோம் என்ற மன உணர்வுடன்தான் – வெறுப்புணர்வுடன்தான் – காழ்ப்புணர்வுடன்தான் – இந்த தந்திரக் காய் நகர்த்தல்களை தாங்கள் செய்கின்றனர் என்பது இவர்களில் பலரின் எண்ணம் என்று தோன்றுகின்றது.

உண்மையில் அதுவல்ல நிலைமை. இவர்கள் கட்சிக்கு எதிராகத்தான் அப்படிச் செயற்படுகின்றார்கள் என்பது நேற்று யாழ். கிட்டு பூங்காவில் நடைபெற்ற – தமிழரசுக் கட்சி ஏற்பாட்டிலான – பிரசாரப் பொதுக்கூட்டத்தின் மூலம் அம்பலமாகியுள்ளது.

யாழ் நகரில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் சுமந்திரனுக்கு அப்பால் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம், சிறில், ரவிகரன் மற்றும் வடக்கில் தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேச சபைகளின் தலைவர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் என்று அடுத்த கட்டத் தலைவர்கள், கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அனைவரும் கட்சியின் முடிவுக்குக் கட்டுப்பட்டு அங்கு பிரசன்னமாகி இருந்தனர். முழுமையாகக் கட்சியின் தீர்மானத்தோடு கட்சியின் பெரும்பான்மையினர் ஒன்றுபட்டு நிற்கின்றனர் என்பதற்கு நேற்றைய கூட்டம் கட்டியம் கூறுகின்றது என்பதுதான் நிலைமை.

கிழக்கிலும் பெரும்பாலும் நிலைமை அப்படித்தான் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

கட்சியின் முடிவை மீறிய கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா இனி எதிர்காலத்தில் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை என்ன முகத்தோடு எதிர்கொள்ளப் போகின்றார் என்பதுதான் முக்கிய கேள்வியாகும்.

கட்சிக் கட்டுப்பாட்டை மீறியோர் வரக்கூடிய பொதுத் தேர்தலில் நெருக்கடியை எதிர்கொள்ளும் மோசமான நிலைமை வந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றுதான் கூற வேண்டும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும், கட்சிக்குள் பெரும் திருவிழா இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

---

## சமுத்திரத் தீர்த்தத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணாமல்போயுள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் சமுத்திரத் தீர்த்தம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை வடமராட்சி, பருத்தித்துறை–கற்கோவளம்கடற்பரப்பில் நடைபெற்றது. இதன்போதே இந்த இரு சம்பவங்களும் இடம்பெற்றன.

இந்தச் சம்பவங்களில், வடமராட்சி கிழக்கு, அம்பன் – குடத்தனையைச் சேர்ந்த கந்தசாமி வினோகரன் (வயது – 54) என்ற குடும்பஸ்தர் உயிரிழந்தார். சாவகச்சேரி – நுணாவிலைச் சேர்ந்த தயாரூபன் வைஷ்ணவன் (வயது – 30) என்ற இளைஞர் காணாமல்போயுள்ளார். இவர் வேம்படி மகளிர் கல்லூரியின் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

நேற்று மாலை நடந்த சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவைக் காண பல பாகங்களிலும் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தனர். வழமை போன்று வல்லிபுர ஆழ்வார் தீர்த்தமாடிய பின்னர், பக்தர்கள் கடலில் இறங்கி நீராடினர். இதன்போது, உயிரிழந்த நபர் நீரில் மூழ்கியுள்ளார். அவரை மீட்ட அங்கிருந்த மக்கள் – கடற்கரையை அண்டிய பரப்பு மணல் நிறைந்தது என்பதால் சுமார் 1.5 கிலோமீற்றர் தூரம் அவரை டிரக்டரில் கொண்டு சென்று, பின்னர் அம்புலன்ஸ் மூலமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

ஆனால், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் தெரிவித்தனர்.

மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்த நிலையில், இரவு சுமார் 8.30 மணியளவில் கடலில் நீராடிக் கொண்டிருந்தவர்களில் ஒருவரைக் காணவில்லை என்று தெரியவந்தது. இதையடுத்து நேற்று இரவு கடற்படையினர் மற்றும் அந்தப் பகுதி மீனவர்களின் உதவியுடன் அவரைத் தேடும் பணி தொடர்ந்தது. நீண்ட நேரத் தேடுதலில் அவர் மீட்கப்படவில்லை.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## தமிழர்கள் திரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்த பிரசாரக் கூட்டம் யாழ். நல்லூர் கிட்டு பூங்காவில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“யுத்தம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் நாங்கள் தேர்ந்தெடுத்து அறிவித்த வேட்பாளருக்கு எங்களுடைய மக்கள் 80 சதவீத அளவிலே கூட ஒன்றாகச் சேர்ந்து ஒற்றுமையாக வாக்களித்து இருக்கின்றார்கள்.

அதன் மூலமாக பெரும் செய்தியையும் சொல்லி வந்திருக்கின்றார்கள். தாயகம் என்று சொல்கின்றார்கள். தாயகம் எங்கே இருக்கின்றது? அது எமது நிலத்திலே எமது மக்களிடமே இருக்கின்றது. எமது மக்கள் வாழ்வதிலேதான் அது தங்கியிருக்கின்றது.

தேசமாக நாங்கள் எழுவோம் என்று சொல்லுகின்றபோது ஒரு நிலப் பரப்பிலே மக்கள் கூட்டமாக நாங்கள் வாழுகின்ற போதுதான் நாங்கள் தேசமாக இருப்போம்.

அந்த வாழுகின்ற உரிமையை நாங்கள் கைப்பற்ற வேண்டுமாக இருந்தால் – எங்கள் வசம் வைத்திருக்க வேண்டுமாக இருந்தால் இருக்கின்ற எங்களது இருப்பையே பாதுகாக்க வேண்டுமாக இருந்தால் பல சூட்சுமங்களை நாங்கள் செய்ய வேண்டும்.

அதிலே ஒரு பிரதானமான விடயம் தான் நாட்டினுடைய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பது. எங்களைக் கொன்று குவித்த முன்னாள் இராணுவத் தளபதிக்கு எங்களுடைய மக்கள் மதிநுட்பத்தினாலே வாக்களித்தார்கள். அதுவும் ஒற்றுமையாக வாக்களித்து பெரும் செய்தியைச் சொன்னார்கள்.

சிங்களவனுக்கு நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்று எங்களுடைய மக்கள் மறுத்து புறந்தள்ளி இருக்கவும் இல்லை. பகிஷ்கரிக்கவும் இல்லை. தமிழனுக்கு வாக்களிக்க வேண்டுமென்று சொல்லி சிவாஜிலிங்கத்திற்குக் கூட வாக்களிக்கவேயில்லை.

ஆகவே, இம்முறையும் தீர்க்க தரிசனத்தோடு – தூரநோக்கோடு – மதிநுட்பத்தோடு வாக்களியுங்கள். சிங்கள வேட்பாளருக்குத்தான் வாக்களிக்கப் போகின்றீர்கள். கடந்த மூன்று தேர்தல்களிலும் சிங்கள வேட்பாளருக்குத்தான் வாக்களித்தீர்கள்.

இவ்வாறு கடந்த மூன்று தேர்தல்களிலும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு பிரசாரம் செய்தவர்கள் – வீதி வீதியாகத் துண்டுப்பிரசுரம் கொடுத்தவர்கள் இன்றைக்குத் திடீரென்று ஏதோ நேற்றைக்குத்தான் பிறந்தவர்களைப் போல் இன்றுதான் தமிழர்களாகப் பிறந்தவர்களைப் போல் தமிழன் தமிழனுக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று இனவாதத்தைக் கக்குகின்றார்கள்.

அது இனவாதம்தான். எங்களுடைய கட்சியை மலினப்படுத்துவதற்கும், எங்களுடைய கட்சியைப் பலவீனப்படுத்துவதற்கும் வெளியிலே இருந்து செய்த சதிகள் ஓரளவுக்காவது வெற்றி பெற்றிருக்கின்றது என்பதுதான் எங்களது ஆதங்கம்.

அப்படியாகக்கட்சிக்குள்ளேயேஇருந்து கொண்டு கட்சியை மலினப்படுத்துபவர்களுக்கு நீங்கள்தான் இறுதியிலே சரியான பாடம் புகட்ட வேண்டும். ஆகவே, மக்கள்தான் சரியான தீர்ப்பைக் கொடுக்க வேண்டும்.

இந்தத்தேர்தலில்சஜித்பிரேமதாஸவை ஆதரிப்பதென இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்க்கமாக முடிவு எடுத்தது. இதை இப்படிச் சொல்ல வேண்டியிருப்பதே எனக்கு வெட்கமாக இருக்கின்றது.

உண்மையில் ஒரு கட்சி ஒரு முடிவு எடுத்தால் ஒரு அறிவிப்போடு முடிந்த முடிவுதான். அதனைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

மேலும்மேலும்அறிக்கைகள்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. பொதுச் செயலாளர் கையெழுத்துப் போட்டு கடிதங்கள் அனுப்ப வேண்டிய தேவையும் இல்லை. ஆனால், இன்றைக்கு அந்தத் தேவை ஏற்பட்டிருக்கின்றது.

அது எங்களுடைய கட்சியை மலினப்படுத்துவதற்கும் பலவீனப்படுத்துவதற்கும் வெளியிலே இருந்து செய்த சதிகள் ஓரளவுக்காவது வெற்றி பெற்றிருக்கின்றது என்பதுதான் எங்களுடைய ஆதங்கம்.

அவ்வாறானவர்களுக்கு மக்கள்தான் சரியான பதிலடியைத் திரும்பக் கொடுக்க வேண்டும். அவ்வாறு மக்கள் கொடுக்கின்ற தீர்ப்புதான் நிரந்தரமானதும் இறுதியானதும் அறுதியானதுமாக இருக்கும்.

ஆகையினாலே இந்தக் குழப்பங்களையெல்லாம் காண்கின்ற நீங்கள் இந்தக் குழப்பங்களுக்கு எல்லாம் முற்றுப் புள்ளி வைத்து நாங்கள் மதிநுட்பமுள்ள மக்கள், எங்களுக்கு வழிகாட்டுகின்ற இந்தத் தாயகக் கட்சி சொல்லியிருக்கின்றபடி தீர்க்கமான முடிவெடுத்து எங்களுக்கு அறிவித்திருக்கின்றபடி செயற்பட வேண்டும்.

அதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றுதிரண்டு ஒற்றுமையாக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்ததைப் போல் இந்தத் தேர்தலிலும் தமிழ் மக்கள் திரண்டு ஒற்றுமையாக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை ஓர் அன்புக் கட்டளையாக நான் உங்களிடம் முன்வைக்கின்றேன்.” – என்றார்.




# மாற்றத்துக்காகத் தெற்கில் எழுச்சி பெற்றிருக்கும் மக்களுடன் சேர்ந்து பயணிப்பதைப் பரிசீலிப்போம்

## தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு அழைப்பு யாழ். பல்கலை ஆசிரியர்கள் 15 பேர் அறிக்கை

"தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் இப்போதைய இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தித் தென்னிலங்கையில் மாற்றத்துக்காக எழுச்சி பெற்றிருக்கும் மக்களுடன் இந்தத் தேர்தலிலே பயணிப்பது குறித்து ஆராய வேண்டும்."

"2024 ஜனாதிபதித் தேர்தலும் சிறுபான்மையின மக்களும்" என்ற தலைப்பில் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே கற்பிக்கும் பதினைந்து ஆசிரியர்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி ஏ.அன்ரனிரஜன், கலாநிதி எஸ்.அறிவழகன். பேராசிரியர் பி.ஐங்கரன், கலாநிதி எஸ்.ஜீவசுதன், கலாநிதி ஏ.கதிர்காமர், பேராசிரியர் ஆர்.கபிலன், கலாநிதி என். ரமணரூபன், கலாநிதி எம்.சர்வானந்தன், என்.சிவகரன், பேராசிரியர் ஆர்.சிறிகரன், கலாநிதி ஆர்.தர்ஷன், கலாநிதி எம்.திருவரங்கன், கலாநிதி என்.வரதன், பேராசிரியர் கே.விக்னரூபன், எஸ்.விமல் ஆகிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே கற்பிக்கும் பதினைந்து ஆசிரியர்கள் இதில் ஒப்பமிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி இலங்கை தனது ஒன்பதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதற்கான தேர்தலிலே வாக்களிக்கவுள்ளது. 2022 ஆம் ஆண்டு நாட்டிலே ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் அதனையொட்டி எழுச்சி பெற்ற மக்கள் போராட்டங்கள் என்பவற்றின் பின்னர் நாடு சந்திக்கும் முதலாவது மிகவும் முக்கியமான தேர்தல் இதுவாகும்.

கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிப்போய் இருக்கும் இந்த நாட்டில் வாழ்க்கைச் செலவு கடந்த இரு வருடங்களிலே பல மடங்கு அதிகரித்துள்ளது. வறுமையும், வேலையின்மையும் மக்களை வாட்டுகின்றன. உரம் மற்றும் மண்ணெய் போன்றவற்றிற்கான மானியக் குறைப்பின் காரணமாக விவசாயிகள், மீனவர்களின் வாழ்வாதாரங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வட்டி வீத அதிகரிப்பு சிறிய வியாபரிகள் வருவாயில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. கட்டடத் துறையில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி காரணமாக நகர்ப்புற முறைசாரா மற்றும் கிராமப் புற மக்களின் தொழில்வாய்ப்புக்கள் குறைந்துள்ளன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் புடைவைக் கைத்தொழிலிலும், பெருந்தோட்டங்களிலும் வேலை செய்யும் பெண்களின் மெய் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. போக்குவரத்து, எரிபொருள், மின்கட்டணங்களின் அதிகரிப்பினால் ஆசிரியர்கள் உள்ளடங்கலான அரச துறையில் பணி புரிவோர் மோசமான பாதிப்புக்களை எதிர்கொள்ளுகிறார்கள். அரச செலவு குறைக்கப்பட்டிருப்பதால் இலவசக் கல்வி, இலவச சுகாதாரத் துறைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிகளவான மக்கள், குறிப்பாக இளைஞர்கள், வேலைவாய்ப்புக்களைத் தேடி வேறு நாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளை நாம் தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் அவதானிக்கிறோம்.

போதைப் பொருள் பாவனையின் அதிகரிப்பு, இளைஞர்களிடையே அதிகரிக்கும் ஆயுதக் கலாசாரம் மற்றும் வன்முறை, இந்திய இழுவைப் படகுப் பிரச்சினை போன்றன வடக்கினை மேலதிகமாகப் பாதிக்கும் விடயங்களாக அமைகின்றன.

நிலைமை இவ்வாறு மோசமடைந்து செல்லுகையிலே நாட்டினைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிய அரசியல்வாதிகளிலே பலர் தொடர்ந்தும் அமைச்சர்களாக இருக்கிறார்கள். ஊழலிலே ஈடுபட்டு நாட்டின் வளங்களையும் செல்வத்தினையும் கொள்ளையிட்டவர்கள் இன்றும் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய ஆட்சியாளர்கள் மிகவும் மோசமான முறையில் இந்த நாட்டினைக் கடந்த ஐந்து ஆண்டுகளிலே ஆட்சி செய்திருக்கிறார்கள். மக்கள் இந்த நிலைமைகளினால்

மிகவும் அதிருப்தியுற்றிருக்கிறார்கள்.

இவ்வாறானதொரு நிலையிலேயே 2022 இல் இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் மையமாக இருந்த 'கட்டமைப்பு மாற்றம் வேண்டும்' (System Change) என்ற கோசம் தற்போதைய தேர்தற் காலத்திலே நாட்டிலே, குறிப்பாகத் தென்னிலங்கையிலே, ஓங்கி ஒலிப்பதனை நாம் ஒவ்வொரு நாளும் காண்கிறோம். போராட்டத்தின் மூலம் ஏற்படாத மாற்றங்களைத் தேர்தலின் மூலமாவது ஏற்படுத்த வேண்டும் என்பதிலே தெற்கில் இருக்கும் மக்கள் ஆர்வமாக இருப்பதனை உணரக் கூடியதாக உள்ளது.

இவ்வாறானதொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலினை வடக்குக் கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழும் சிறுபான்மை மக்கள் கவனமாகவும், புத்திசாலித்தனத்துடனும் கையாள வேண்டியது அவசியம். தென்னிலங்கையிலே பல தசாப்தங்களுக்குப் பின்னர்

தொடர்ச்சி▼



# மாற்றத்துக்காகத் தெற்கில் எழுச்சி பெற்றிருக்கும் மக்களுடன் சேர்ந்து பயணிப்பதைப் பரிசீலிப்போம்

## தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு அழைப்பு யாழ். பல்கலை ஆசிரியர்கள் 15 பேர் அறிக்கை

தொடர்ச்சி▲

இனவாதத்தினை முன்னிறுத்தாத தேர்தற் பிரசாரத்தினைப் பிரதான வேட்பாளர்கள் முன்னெடுப்பதாக நாம் அறிகிறோம். மக்களின் நலனினை முன்னிறுத்தும் பொருளாதார ரீதியான மாற்றங்கள், ஆட்சி முறையில் மாற்றம், ஊழல் ஒழிப்புப் போன்ற கோசங்களினை முன்வைக்கும் வேட்பாளர்களின் பின்னால் தென்னிலங்கை மக்கள் பெருமளவிலே திரளுவதனை நாம் தேர்தற் கூட்டங்களிலே காண்கிறோம்.

தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் இந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தித் தென்னிலங்கையில் மாற்றத்துக்காக எழுச்சி பெற்றிருக்கும் மக்களுடன் இந்தத் தேர்தலிலே பயணிப்பது குறித்து ஆராய வேண்டும். அதேநேரம் நாட்டினைக் கடந்த ஐந்து ஆண்டுகளிலே மோசமான நிலைக்குத் தள்ளியோரினைத் தோற்கடிப்பதுவும் அவசியம். இனப்பிரச்சினைத் தீர்வு, மதச்சார்பற்ற அரசினை உருவாக்குதல், போர்க்குற்றங்களை விசாரித்தல் போன்ற விடயங்களிலே பிரதானமான வேட்பாளர்கள் முற்போக்கான நிலைப்பாடுகளை எடுக்காமை குறித்து நாம் சுட்டிக்காட்ட வேண்டிய அதேவேளை, பொருளாதார நெருக்கடியும், ஊழலினால் ஏற்படும் பொருளாதார, அரசியற் சீர்கேடுகளும் சிறுபான்மை சமூகங்களையும் மோசமாகப் பாதித்துள்ளன என்பது குறித்து நாம் விழிப்புணர்வுடன் இந்தத் தேர்தலிலே செயலாற்றுவது அவசியம். இனத்துவ ரீதியாக மாத்திரமல்லாது, வர்க்க ரீதியாகவும், சாதிய ரீதியாகவும், பால்நிலை ரீதியாகவும் அரசின் அடக்குமுறை எவ்வாறு எம்மைப் பாதிக்கிறது என்பது பற்றி சிந்திப்பது அவசியம்.

நாம் எமது ஜனாதிபதித் தெரிவினை மேற்கொள்ளுகையிலே தனியே இனப்பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வுகளுக்குள் மாத்திரம் குறுக்கிவிடாது, நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் பொருளாதார சூழ்நிலை குறித்தும் பகுத்து ஆராய்வது அவசியம். அவ்வாறு செய்வதன் மூலம் நாட்டின் பிரதான அரசியல் நீரோட்டத்தில் இருந்து எம்மை நாமே புறமொதுக்காது இருப்பதனை உறுதி செய்யலாம். நாம் தனிமைப்படுத்தப்படாது, எமது அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்களைத் தென்னிலங்கை மக்களுடன் சேர்ந்து எதிர்காலத்திலே வென்றெடுப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவது குறித்து இந்தத் தேர்தற் காலத்திலே சிந்திக்க வேண்டும்.

சர்வதேசத்தினால் தான் எமக்கு அரசியற் தீர்வு கிடைக்கும் என்ற அதீத நம்பிக்கை குறித்தும் நாம் விழிப்புடன் இருப்பது அவசியம். இன்றுள்ள சூழலிலே அந்த நம்பிக்கையின் அடிப்படையில் மாத்திரம் நாம் எமது தேர்தற் தெரிவுகளை வெளிப்படுத்துவது அரசியல் ரீதியாக உள்நாட்டிலே எம்மை மேலும் பலவீனப்படுத்தக் கூடும். பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிக எண்ணிக்கையிலே எமது இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலையினை நாம் முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமாயின், எமது சமூகங்களிலே பொருளாதார ரீதியில் நலிவுற்ற மக்களின் வாழ்க்கையிலே மாற்றங்களை உருவாக்கக் கூடிய வகையிலே நாம் தேர்தல்களிலே வாக்களிப்பது பற்றி சிந்திக்க முற்பட வேண்டும்.

இவ்வாறான காரணங்களினால் தமிழ்த் தேசிய அரசியலினை மாத்திரம் முன்னிறுத்தி, சர்வதேச கவனத்தினை ஈர்ப்பதனை நோக்கமாகக் கொண்டு தேர்தலிலே வாக்குக் கோருவதும், தமிழ்த் தேசிய அடிப்படையிலே தேர்தலினைப் புறக்கணிப்பதுவும் அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்குப் பின்னடைவினை ஏற்படுத்தக் கூடும். பொருளாதார ரீதியிலே மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் எமது சமூகங்களும், ஊழல் மற்றும் ஏனைய சீர்கேடுகளினால் பாதிக்கப்பட்டுள்ள எமது பொது நிறுவனங்களும் முன்னேறுவதற்கு இந்தத் தேர்தல்கள் ஏதாவது வழியில் சந்தர்ப்பங்களைத் திறக்குமா என நாம் சிந்திப்பது அவசியம். இதன் மூலம் எமது பொருளாதார நிலையிலும் நாம் முன்னேறங்களைக் கொண்டு வர முடியும். தென்னிலங்கையில் இனவாதம் சற்று அடங்கி இருக்கும் இந்த வேளையிலே, ஒட்டுமொத்த இலங்கையிலும் ஜனநாயகத் தன்மை மிக்க, இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தினை வலியுறுத்தும், அரசியல் மாற்றம் ஏற்படுவதற்கான ஒரு வாய்ப்பாக நாம் இந்தத் தேர்தலினை நோக்குவது பொருத்தமாக இருக்கும் என நாம் கருதுகிறோம்.

இந்த அடிப்படையிலே தற்போதைய ஆட்சியாளர்களை நிராகரித்து, முற்போக்கானதும், ஊழலுக்கு எதிரானதும், நாட்டினதும் மக்களினதும் பொருளாதார மீட்சியிலே அக்கறை கொண்டதும், 2022 இல் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் போது எழுச்சியுற்ற முற்போக்கான அரசியற் பொருளாதார மாற்றங்களுக்கான கோசங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கக் கூடியதும், நம்பகத்தன்மை மிக்கதும், சட்டத்தின் ஆட்சியினையும், நீதித் துறையின் சுதந்திரத்தினையும் உறுதி செய்யக் கூடியதும், இனங்களை ஒற்றுமைப்படுத்தக் கூடியதுமான ஒரு எதிர்காலத்தினை நோக்கி தமிழ் மக்களும், ஏனைய சிறுபான்மை மக்களும் வாக்களிப்பது பொருத்தமாக இருக்கும் என நாம் கருதுகிறோம். இதன் மூலம் சுதந்திரத்துக்கும், சமத்துவத்துக்குமான கதவுகளை படிப்படியாகவேனும் எம்மால் திறக்க முடியும். – என்று உள்ளது.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# விழலுக்கு நீர் இறைத்தல்

நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் முறையும் வாக்கு எண்ணப்படும் முறைமையும் சாதாரண - சாமானியரான - வாக்காளர்களுக்கு தெரியாமல் இருந்தால் அது தப்பில்லை.

ஆனால், அரசியலில் இருப்பவர்களுக்கு - நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்களுக்கு - அதுவும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றவர்களுக்கு - அந்தத் தேர்தல் முறை தெரியாமல் இருப்பதும், புரியாமல் இருப்பதும் ஏற்புடையதன்று.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் மலையக மக்கள் சார்பில் களமிறங்கி இருப்பவராகக் கூறப்படும் மயில்வாகனம் திலகராஜ் இந்தத் தேர்தல் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியிருக்கும் கருத்துக்கள் வியப்பில் ஆழ்த்துபவை. இந்தத் தேர்தல் முறைமை மற்றும் வாக்குக் கணக்கெடுப்பு போன்றவற்றை அறியாமல் அவர் பேசுகின்றாரோ என்று தோன்றுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு மூன்றாவது வாக்கை அளிப்பதன் ஊடாக மலையக மக்களின் பிரச்சினைகளை பேசுபொருளாக்கமுடியும்எனக்கூறுகின்றார் மயில்வாகனம் திலகராஜ்.

"எங்கள் மக்கள் மடையர்கள் அல்லர். தெளிவானவர்கள். அவர்களிடம் நான் வைக்கும் கோரிக்கை 38 பெயர்கள் வாக்குச் சீட்டில் இருக்கின்றன. அவர்களின் சின்னங்கள் இருக்கின்றன. நான் ஏற்கனவே சொன்னது போல் 1 மற்றும் 2 ஆம் விருப்பு வாக்கை உங்கள் அறிவின் பிரகாரம் தீர்மானியுங்கள். மலையக மக்களின் பிரச்சினையை பேசுபொருளாக்க மூன்றாம் விருப்ப வாக்கை எனக்கு அளியுங்கள்.

நான் இலங்கையில் ஜனாதிபதியாக முடியாது என்ற ரீதியில்தான் போட்டி போடுகிறேன். எனவே, இந்த 1,2ஆம் தெரிவில் எனக்கு வாக்கு வழங்கப்பட்டால் அது சிதறடிக்கப்பட்ட வாக்கு. நான் சிதறடிக்க வரவில்லை. சிறகடிக்கவே வந்துள்ளேன். அரசியல் வானில் பறக்க வந்திருக்கிறேன். எங்களுக்கு உங்கள் அன்பை மட்டும்காட்டுங்கள். எனவே, எனக்கு 3ஆவது விருப்பு வாக்கை அளிக்குமாறு கோருகிறேன்." என அவர் தெரிவித்துள்ளார்.

'எங்கள் மக்கள் மடையர்கள் அல்லர்' என்று கூறும் அவர், முதலில் தாம் விடயம் அறிந்தவர் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது.

அவரது கருத்தில் இரண்டு முக்கிய தவறுகள் உள்ளன.

ஒன்று - முதலாவது, இரண்டாவது வாக்கை தமக்கு அளித்தால் அது சிதறடிக்கப்பட்ட வாக்காகிவிடும் என்பது தவறு. நிச்சயமாக இந்தத் தேர்தலில் அவர் முதலாவதாகவோ இரண்டாவதாகவோ வர முடியாது என்பதும் அவருக்குத் தெரியும். இந்தப் பின்புலத்தில் எந்த வேட்பாளரும் 50 வீத வாக்குகளை முதல் சுற்றில் பெறாத நிலையில், அவருக்கு முதலாவதாக அளிக்கப்பட்ட வாக்கின் அடுத்த தேர்வு அச்சமயத்தில் நிச்சயம் கவனத்தில் எடுக்கப்படும். ஆகவே பெரும்பாலும் அது சிதறடிக்கப்பட்ட வாக்காகிவிடாது.

அடுத்தது - மூன்றாவது வாக்கை தமக்கு அளிக்கும்படி அவர் கோருவது. நிச்சயமாக முதல் இரண்டு இடங்களை அவர் பெறப்போவதில்லை. அந்தப் பின்புலத்தில் மூன்றாவதாக அவருக்கு இலக்கமிடப்படும் வாக்குகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் எண்ணக் கூடப் படமாட்டா. கணக்கிலேயே எடுக்கப்படாத வாக்கு ஒன்று அளிக்கப்பட்டு என்ன பயன்?

ஆக, மூன்றாவது வாக்கைத் தமக்கு வழங்குங்கள் என்ற அவரது கோரிக்கை விழலுக்கு நீர் இறைக்கக் கோருவது போன்ற வேலைதான். அது எண்ணப்படவோ கணக்கில் எடுக்கப்படவோ வாய்ப்பேயில்லை என்பதுதான் உண்மை.

# டில்லி முதல்வர் கேஜ்ரிவால் இராஜினாமா; ஆட்சி அமைக்க உரிமை கோரினார் ஆதிஷி!



துணைநிலை ஆளுநர் வி.கே.சக்சேனாவை சந்தித்து, டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் தனது இராஜினாமா கடிதத்தை நேற்று வழங்கினார். இதையடுத்து, ஆட்சி அமைக்க ஆளுநரிடம் ஆதிஷி உரிமை கோரினார்.

டில்லி துணைநிலை ஆளுநர் வி.கே.சக்சேனாவை நேற்று பிற்பகல் அரவிந்த் கேஜ்ரிவால் சந்தித்தார். அப்போது, அவர் தனது இராஜினாமா கடிதத்தை துணைநிலை ஆளுநரிடம் சமர்ப்பித்தார். இதனையடுத்து, கேஜ்ரிவாலுடன் சென்ற ஆதிஷி, ஆட்சி அமைக்க துணைநிலை ஆளுநரிடம் உரிமை கோரினார். அப்போது, ஆம் ஆத்மி கட்சி எம்.எல்.ஏகளின் ஆதரவு கடிதத்தை அவர் துணைநிலை ஆளுநரிடம் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஆதிஷி,

“அரவிந்த் கெஜ்ரிவால் எடுத்த முடிவு உலக ஜனநாயக வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அவருக்கு போதுமானது அல்ல் டில்லி மக்களின் தீர்ப்பை அறிய அவர் விரும்புகிறார். தான் நேர்மையானவர் என்று பொதுமக்கள் கூறினால்தான் முதல்வர் நாற்காலியில் அமருவேன் என்று அவர் கூறியுள்ளார். அரவிந்த் கெஜ்ரிவால் தனது பதவியை இராஜினாமா செய்தது வருத்தம் அளிக்கிறது. அவரை மீண்டும் முதல்வராகக் கொண்டுவர பாடுபடுவேன்.

ஆம் ஆத்மி போன்ற ஒரு கட்சியால் மட்டுமே தன்னைப் போன்ற முதல் முறை அரசியல்வாதிக்கு இத்தகைய பொறுப்புகளை வழங்க முடியும். நான் மகிழ்ச்சியடைகிறேன், ஆனாலும் எனது மூத்த சகோதரர் இன்று இராஜினாமா செய்வதில் நான் மிகவும் வருத்தப்படுகிறேன். டில்லி முதல்வர் பதவியில் இருந்து கெஜ்ரிவால் இராஜினாமா செய்வது ஒரு சோகமான தருணம். எனவே, எனக்கு மாலை அணிவிக்கவோ அல்லது வாழ்த்தவோ வேண்டாம். அரவிந்த் கேஜ்ரிவாலின் வழிகாட்டுதலின் கீழ் முதல்வராக பணியாற்றி டில்லி மக்களை பாதுகாப்பேன். கேஜ்ரிவால் என்னை நம்பி, என்னை எம்.எல்.ஏ.வாகவும், பின்னர் அமைச்சராகவும், இப்போது முதல்வராகவும் ஆக்கினார். அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.” என தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் ஷீலா தீட்சித், பா.ஜ.கவின் சுஷ்மா ஸ்வராஜ் ஆகியோருக்குப் பிறகு டில்லியின் மூன்றாவது பெண் முதல்வராக ஆதிஷி பதவி ஏற்க உள்ளார். தற்போது மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி நாட்டின் ஒரே முதல்வராக உள்ள நிலையில், ஆதிஷியின் பதவி ஏற்புக்குப் பின் இந்த எண்ணிக்கை இரண்டாக அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, மதுபான கொள்கை ஊழல் வழக்கில் டில்லி திஹார் சிறையில் இருந்த கேஜ்ரிவால் கடந்த 13ஆம் திகதி பிணையில் விடுதலையானார். இதையடுத்து ஆம் ஆத்மி கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் அர்விந்த் கேஜ்ரிவால் பேசும் போது,

“முதல்வர் பதவியை இராஜினாமா செய்வேன். மக்கள் எனக்கு மீண்டும் வாக்களித்த பிறகு மீண்டும் அப்பதவியில் அமர்வேன்” என்றார்.

டில்லி சட்டப்பேரவைக்கு அடுத்த 5 மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் கேஜ்ரிவால் இவ்வாறு அறிவித்தார். அதன்படி நேற்று வர் பதவியை இராஜினாமா செய்தார்.

# பழம்பெரும் நடிகை குந்தலா காலமானார்

## திரையுலகினர் இரங்கல்





பழம்பெரும் நடிகை சி.ஐ.டி. சகுந்தலா காலமானார். அவருக்கு வயது 84.

தமிழ் தெலுங்கு, மலையாளம், கன்னடம் என பல்வேறு மொழிகளில் நடிகையாக திகழ்ந்தவர் ஏ.சகுந்தலா. 1970ஆம் ஆண்டு ஜெய்சங்கர் நடிப்பில் வெளியான ’சி.ஐ.டி. சங்கர்’ படத்தில் அறிமுகமானதால், அதன் பிறகு ‘சி.ஐ.டி’ சகுந்தலா என்று அழைக்கப்பட்டார். சேலம் மாவட்டத்தின் அரிசி பாளையத்தைச் சேர்ந்த சகுந்தலா சென்னையில் லலிதா, பத்மினி, ராகினி நடத்தி வந்த நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்று நடனமாடி வந்தார். அப்போது கிடைத்த அறிமுகங்களின் மூலம் திரையுலகில் நுழைந்து சின்ன சின்ன கதாபாத்திரங்களில் நடித்தார்.

‘படிக்காத மேதை’, ‘கை கொடுத்த தெய்வம்’, ‘திருடன்’, ‘தவப்புதல்வன்’, ‘வசந்த மாளிகை’, ‘நீதி’, ‘பாரத விலாஸ்’, ‘ராஜராஜ சோழன்’, ‘பொன்னூஞ்சல்’, ‘என் அண்ணன்’, ‘இதயவீணை’ என ஏராளமான திரைப்படங்களில் நடித்துள்ளார். தமிழ் தவிர, தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் நடித்து வந்தார்.

சினிமாவிலிருந்து விலகிய பிறகு சீரியல்களில் நடித்து வந்தார். அதன்பிறகு வயது மூப்பு காரணமாக பெங்களூருவில் உள்ள தனது மகள் வீட்டில் தங்கியிருந்த அவருக்கு, நேற்று நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. அங்குள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சகுந்தலாவின் மறைவுக்கு திரையுலக பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். .





# ரஷ்ய - உக்ரைன் போர்:

## ஆயிரக்கணக்கில் மக்கள் வெளியேற்றப்பட்டனர்

உக்ரைனிய படைகளின் ஆக்கிரமிப்பு காரணமாக குர்ஸ்க் பிராந்தியத்தில் அமைந்துள்ள கிராம மக்களை வெளியேற்ற ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனிய படைகளின் திடீர் தாக்குதல் ஆரம்பமாகி 6 வாரங்களுக்கு பின்னர் ரஷ்யா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதுவரை 150,000 மக்களை அவர்களின் குடியேற்றங்களிலிருந்து ரஷ்யா வெளியேற்றியுள்ளது.

அத்துடன், உக்ரைனிய எல்லையை ஒட்டிய 15 கிலோமீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ள ரில்ஸ்கி மற்றும் கோமுடோவ்ஸ்கி ஆகிய பிராந்தியங்களில் வசிக்கும் மக்களை வெளியேற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த 15 கிலோமீட்டர் சுற்றளவில் அதிக எண்ணிக்கையிலான கிராமங்கள் உள்ளதோடு அதிக எண்ணிக்கையிலான மக்களும் அங்கு வசித்து வருகின்றனர்.

உக்ரைனிய படைகளின் திடீர் தாக்குதல் மற்றும் முன்னேற்றத்திற்கு மத்தியிலும் ரஷ்ய படைகள் தொடர்ந்து எதிர்தாக்குதலை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, கடந்த வாரங்களில் உக்ரைனிய படைகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்ற பல குடியேற்றங்களை ரஷ்ய படைகள் வெற்றிகரமாக மீண்டும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லெபனானில் ஒரே நேரத்தில் வெடித்த பேஜர் கருவிகள்

## 8 பேர் உயிரிழப்பு








லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினர் மற்றும் பல்வேறு அரச அதிகாரிகள் தகவல் தொடர்புக்காகப் பயன்படுத்தி வரும் பேஜர் கருவிகள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின.

இதில் 8 பேர் உயிரிழந்தனர் எனவும் 2,750 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

காசா போர் தொடங்கிய பின்னர், பாதுகாப்பு காரணங்களுக்காக ஹிஸ்புல்லா அமைப்பினர் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று அவர்கள் பயன்படுத்தி வந்த பேஜர் கருவிகள் ஒரே நேரத்தில் வெடித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பேஜர் கருவிகளில் பயன்படுத்தப்படும் லித்தியம் மின்கலங்கள் அதிகமாகச் சூடேறியதால் இந்த வெடிப்பு நிகழ்ந்துள்ளதாகவும், இது இஸ்ரேலின் சைபர் தாக்குதலாக இருக்கலாம் எனவும் ஹிஸ்புல்லா அமைப்பினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்த குற்றச்சாட்டுக்கு இஸ்ரேல் தரப்பிலிருந்து இதுவரை பதிலளிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





- கி.துரைராசசிங்கம் -

# யார் இந்த பொது வேட்பாளர்? யார் இந்த சுமந்திரன்?

**அன்புள்ள தம்பி,**

உனது வயதைக் கடந்து வந்தவன் நான். உனது, உணர்ச்சியை மூன்றாம் தரப்பாக நின்று நான் பார்க்கவில்லை. நீயாக நின்றே, உன்னை நான் பார்க்கின்றேன். உனது குமுறல், கொந்தளிப்பு, உள்ளப் பதைப்பை எல்லாம் நான் அனுபவித்தவன் தான்.

ஆனால், நீ அனைத்தையும் உடைத்தெறியும், ஆக்ரோசத்தோடு பாயும் காட்டாறு. நான் அதிக தூரம் பாய்ந்து வந்து கரைக்கடங்கி ஓடி கழிமுகத்தை அண்மித்து விட்ட முதிர் ஆறு. நஞ்சைக்கும், புஞ்சைக்கும் நீர் வளர்க்க வேண்டிய என் கடமையையும் உணர்கின்றேன்.

என் வழிப்பயணத்தையும், உலக நடப்பியலையும் உனக்கு நான் சொல்லித்தான் ஆக வேண்டும். அவற்றை உரைத்திடும் போது என் மனம் உவப்படையாத சில விடங்களையும் நான் தவிர்க்க முடியாதுள்ளது. ஆனால், அவற்றை நான் ஆகக் குறைத்தே சொல்வேன்.

இலங்கை தற்போது ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிற்கிறது (2024). நாமும் இலங்கையர்கள்தானே. மாறி மாறி வந்த அரசுகள் எம்மை ஏறி ஏறி மிதித்தன. இதனால், இலங்கையன் என்று சொல்ல உனக்கு வெட்கமாய் இருக்கின்றதல்லவா? எனக்கும் தான் அப்படி இருந்தது. அதுவும் முள்ளிவாய்க்கால் கொடூரத்தின் பின்... சே... இது நாடா? கலிங்கம் வென்ற அசோகனே காலில் விழுந்து வழிபட்டு, பாவ விமோசனம் வேண்டிய... புத்தரைப் பூசிப்போர் அரியாசனத்தில் அமர்ந்துள்ள இந்த நாட்டை என் நாடு என்று சொல்ல நெஞ்சு இடம் தரவில்லையே என்பாய்.

உண்மை.. ஆனாலும், இந்த நாட்டில் உரிமை கேட்கும் நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டுமென்றால், நாம் இதன் குடிமக்கள் என்பதுதான் அதற்கான முதற் தகுதி. முதற் தகுதி குடிமகனாய் இருந்துகொண்டு தான் குறை கூற முடியும், அரசை. இதன் கட்டமைப்புக்குள் நின்று தான் நம்மைப் பிணித்துள்ள கட்டுக்களை உடைத்தெறிய முடியும்.

இவ்விடயம் பற்றித் திறனாய்வு செய்வதற்கு முன் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிற்கும் தமிழ்ப் பொதுவேட்பாளர் பற்றிய சில செய்திகளைப் பார்ப்போம், வா...

அண்மையில் இயற்கையெய்திய நமது பெருந்தலைவர் இரா.சம்பந்தன் ஐயா பொது வேட்பாளர் பற்றிக் கூறியதை நீ அறிவாய் தானே. “இது பைத்தியகாரத்தனமானதும், முட்டாள்தனமானதுமான காரியம்“ என்று அவர் சொன்னார். இது குறித்தும் நீ அவரை வசைபாடியதை நான் அறிவேன். ‘மூத்தோர் சொல்லும், முதிர் நெல்லிக் கனியும் முன்னால் கசக்கும், பின்னர் இனிக்கும்” என்பதை நீ அறியாயா... என்ன? ஐந்து, பத்து ஆண்டுகள் அல்ல, எழுபதுக்கும் மேற்பட்ட ஆண்டு கால முதிர்ச்சியின் வெளிப்பாடு அது. இயலாமையின் பிதற்றல் இது என்று நீ முணுமுணுப்பது எனக்குக் கேட்கிறது. அல்ல... அல்ல... இதைவிட அவர் மீது அபாண்டம் சொரிந்த அரைகுறைகளின் வார்த்தைகள் உன்னைக் கடுப்பேற்றி விட்டன தானே, பொறு... இது பற்றியும் பின்னர் பேசுவோம்.

**மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளருமான கி.துரைராசசிங்கம் தமிழ் இளைஞர்களான தம்பியர்களுக்கு எழுதிய பகிரங்க மடல் இது.**

இப்போது கவனி ! யார் இந்தப் பொது வேட்பாளர். இரண்டாயிரமாம் ஆண்டுவரை இவர் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களிக்கவில்லை, அறிவாயா நீ! அறியமாட்டாய், 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் இருந்து அவர் தமிழ்த் தேசியப் பாதைக்குள் வந்துவிட்டதாய்க் கூறுகின்றார், நம்பிவிட்டாய் நீ.

1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலை தமிழ் ஈழம் அமைப்பதற்கான வாக்கெடுப்பாய்ப் பிரகடனப்படுத்தியது தமிழர் விடுதலைக் கூட்டணி. இதில்... பட்டிருப்புத் தொகுதியில் தனது மாமன் முறையான P.இரத்தினசிங்கம் அவர்களின் ஐக்கிய தேசியக் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்திற்கு வாக்களித்தவர் இவர். இதுமட்டுமல்ல, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராகச் செயற்பட்டமை தொடர்பில் இரண்டு குறிப்புகள் உண்டு. அவற்றை நான் இங்கு தரவில்லை. நீ என்னைத் தொடர்பு கொண்டு அறிக.

தொடர்ச்சி▼



# யார் இந்த பொது வேட்பாளர்? யார் இந்த சுமந்திரன்?

தொடர்ச்சி▲

1989 பொதுத் தேர்தலில் ஈரோஸ்’க்கு ஆதரவாகச் செயற்பட்டவர். இது செய்தி அல்ல, “வடக்கைச் சேர்ந்த அமிர்தலிங்கம் மட்டக்களப்பில் வெல்வதா?” என்று, பிரதேச வாதம் பேசி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கூட்டுக்கு எதிராக வேலை செய்தவர்களில் இவரும் ஒருவர்.1994, 2000 மற்றும் 2001ஆம் ஆண்டுகளிலும் ஐக்கிய தேசியக் கட்சிக் காகவே உழைத்தவர்.

2001ன் பின் தமிழ்த் தேசியத் தடத்தினுள் வந்தார். 2004 தேர்தலின் போது கருணா குழுவின் வழிப்படுத்த லிலேயே மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி வேட்பா ளர்கள் செயற்பட்டனர். பொது வேட்பாளரும் இவ்விதமே செயற்பட்டார். கருணாவின் பிரிவிற்குக் காரணமாயிருந்தவர் என்ற குற்றச்சாட்டில் இராஜன் சத்தியமூர்த்தி சுடப்பட்டார். இவரது மரணச்சடங்கில் பொது வேட்பாளர் கட்டுமட்டாய்க் கலந்துகொண்டார்.

மேற்குறித்த தேர்தலில் கருணா குழுவின் கட்டளைக்கு முரண்பட்ட மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் தோல்வியடைந்த தையும், கருணா குழு அரசோடு சேர்ந்ததன் பின் தெரிவு செய்யப்பட்ட கிங்ஸ்லி இராசநாயகம் அச்சுறுத்தலால் பதவி துறந்ததையும் பின் பொது வேட்பாளர் நாடாளுமன்ற உறுப் பினர் ஆனதையும் நீ அறிந்துகொள்.

இத்தரவுகள் பொது வேட்பாளர் மீது குறைகாண்பதற்கா கத் தரப்பட்டவை அல்ல. மாறாக 1976ல் இருந்து அவர் தமிழ்த் தேசியத் தடத்தில் நடக்கின்றார் என்ற அவரது கூற்று தொடர்பில் நீ தெளிவடைவதற்காகவே தரப்பட்டவை.

தம்பி, தமிழ்த் தேசியக் கட்டமைப்பின் தேர்தல் அறிக்கை என்ன சொல்கிறது எனத் தெரிந்து கொண்டாயா நீ? சமஷ்டி யையோ, தமிழீழத்தையோ அவர்கள் கோரவில்லை. மாறாகத் தமிழ்த் தேசமாய் ஒன்றுபடுவோம் என்று தமிழ் மக்களைக் கேட்கின்றார்கள். அவ்வளவுதான்.

தமிழீழமோ, சமஷ்டியோ ஓர் அரசியற் கட்டமைப்பு அல்லது நிறுவனம். ஆனால், தமிழ் மக்கள் தேசமாய் ஒன்றுபடுதல் ஒரு கட்டமைப்போ, நிறுவனமோ அல்ல. எதற்காக இது என்றால், சர்வசதேசத்தைக் கவர்ந்திட என்கிறார்கள். அந்தக் கவன ஈர்ப்பு எதனைச் சாதிக்கும்?

சர்வதேசம் என்பதைக் கருத்தோடு பார்த்தால், அது ஐக்கிய நாடுகள் சபையையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தையுமே குறிக்கின்றதென்பதை அறிவாய்... நீ. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் ஓர் அறிஞர் சபை, ஒவ்வொரு நாடு பற்றியும் ஆய்ந்து ஒவ்வோராண்டும் ஆய்வறிக்கை சமர்ப்பித்து, உலக அரசியலாளர்களைக் கொண்டு விவாதித்து... அவர்களை அறமுறை ஆட்சி செய்ய வழிப்படுத்துவோம் என்று முயல்கின்றது அது. ஆனால், அரசியலாளரோ தத்தம் அதிகாரங்களை நிலை நிறுத்தவே முயல்கின்றனரே தவிர அறிவழி செல்ல அல்ல.

உக்ரேன் – ரஷ்யா, இஸ்ரேல் – பலஸ்தீனம், ஆயுத ஆட்சி நடக்கும் ஆப்கானிஸ்தான்... எல்லாம் இதைத்தானே வெளிப்படுத்துகின்றன என்பதை அறிவாய் தானே... நீ.

நம் புலம்பெயர் உறவுகளின் வாக்குவங்கிகளைக் கொண்டுள்ள மேற்குலக நாடுகளில் அரசவைகளிலும், ஊராட்சி அவைகளிலும் நமக்கு இதமளிக்கும் குரல்கள் கேட்கின்றனவே என்பாய் நீ. உண்மை, அவை வேண்டும், அவை இலங்கை அரசுக்கு சிற்சிறு சங்கடங்களைத் தான் ஏற்படுத்தும். அதற்கு மேல் போகாது என்பதையும் அறிய வேண்டும் நீ.

ஆக... “அழுதழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்” என்பதை நீ உணர வேண்டும். நம் நாட்டு அரசியலமைப் பில் நம் உரிமைகளைப் பொறிக்க நாம் தான் உழைக்க வேண்டும்.

ஒன்றை நீ... நன்கு உணர வேண்டும். நமது விடுதலை என்பது... நம் மீதான ஆதிக்க சக்தியை நாட்டை விட்டு அகற்றி விட்டு நாம் நம் இறைமை கொண்டு நம் அரசமைப்பை உருவாக்கி நம்மை நாமே ஆள்வதல்ல. மாறாக ஜனநாயக அடிப்படையிலே எண்ணிக்கைப் பெரும்பான்மையினரோடு இருந்து கொண்டு எமக்கான பாதுகாப்புக் கவசங்களை ஏற்படுத்திக் கொள்வதே... அது... நம் விடுதலை.

இது தொடர்பான சில முன்னுதாரணங்களை உன் முன் வைக்கின்றேன்... பரிசீலித்துப் பார்.

தம்பி... இலங்கை சுதந்திரமடைந்த கையோடு மலையக மக்கள் ஏழு இலட்சம் பேரின் குடியுரிமை பறிக்கப்பட்டது.. அவர்களின் எட்டு பிரதிநிதிகளின் பலத்தைப் நாடாளுமன் றத்தில் இழந்தார்கள். இதை ஒட்டித் தான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தோற்றம் பெற்றதென்பதால் இதை நீ நன்கு அறிவாய்.

இவற்றுக்குச் சொல்லப்பட்ட காரணங்கள் எது எனத் தெரியுமா... உனக்கு? கவனி... அவர்களைப் பிரதிநிதித்து வப்படுத்திய கட்சி இலங்கை இந்திய காங்கிரஸ். எனவே, இவர்கள் இவர்கள் இந்தியாவின் விசுவாசிகளே, இவர்களுக்கு

தொடர்ச்சி▼



# யார் இந்த பொது வேட்பாளர்? யார் இந்த சுமந்திரன்?

தொடர்ச்சி▲

இங்கேன் குடியுரிமை என்றார்கள்... ஆட்சியார்கள்!

மலையகத் தலைவர்கள் சேர்ந்தார்கள்... ஆய்ந்தார்கள்... இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றம் செய்தார்கள். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அறுபதுகளில் செலுத்திய செல்வாக்கின் காரணமாக தொண்டமான் அவர்களுக்குப் நாடாளுமன்றத்தில் நியமன உறுப்பினர் என்ற தகுதியைப் பெற்றுக் கொடுத்தது. அரசின் ஆக்ரோசம் தணிந்தது.

இந்திய பாக்கிஸ்தானிய (வதிவோர்) குடியுரிமைச்சட்டம் கொடுத்த இடைவெளியைப் பயன்படுத்தி இழந்த குடியுரிமையை மெது மெதுவாகப் பெற்றார்கள். பின் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆனார்கள். அரசுக்கு ஆதரவு வழங்கினார்கள். 2008 வரை குடியுரிமை தொடர்பாக பல்வேறு சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேறின. இழந்த குடியுரிமையையும், நாடாளுமன்ற உறுப்புரிமையையும் பெற்றுக் கொண்டார்கள். தற்போது அடுத்த பரிமாணத்துக்குள், விரிவாக்கத்திற்குள் நகர்கின்றார்கள். நாடற்றோர்.. குடியுரிமை இழந்தோர்... என்பன எல்லாம் இன்று இல்லை அல்லவா?

அரசுக்கு ஆதரவு அளித்தல் என்றதும், நீ அதிர்ச்சி அடைகின்றாய். ஆம் தம்பி, ஈழத் தமிழர்களான நாம் இணக்க அடிப்படையிலே எம உரிமைகளை வெல்லுதல் என்ற அடித்தளத்திலே நின்று கொண்டுதான் ஆட்சிக்கு ஆதரவளிக்க வேண்டுமே தவிர, தற்போது ஆதரவளிக்கும் தமிழர்கள் போல் உதிரிகளாகச் சென்று அரசோடு கலந்து அல்ல. நாம் ஒரு கூட்டாக, ஓர் அணியாக எமது தனித்துவத்தை வெளிப்படுத்திக் கொண்டே இணக்க அரசியல் செய்வோம். எவ்விதத்திலும் கலந்தோ, கரைந்தோ விடமாட்டோம்.

சரி. இனி இந்தியாவுக்குச் செல்வோம்... வா. 1917க்கு முன்பே நீதிக்கட்சி செயற்படத் தொடங்கி விட்டது. ஆரிய எதிர்ப்பின் அடிப்படையில் திராவிட நாடு கோரியது அக்கட்சி. பின் பெரியாரின் திராவிடர் கழகம் அதை முன்நகர்த்திச் சென்றது. திராவிட முன்னேற்றக் கழகமும் அதையே பேசியது. 1962ல் இந்திய – சீனப் போர் மூண்டதைத் தொடர்ந்து அண்ணா திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டார். இந்தியாவுக்குள்ளேயே மாநில சுயாட்சி என்றார். 1967 இல் மதராஸ் மாநில ஆட்சியைக் கைப்பற்றினார்கள். 1969ல் அதை (மதராஸை)... தமிழ்நாடு எனப் பெயர் மாற்றினார். திராவிடர் கழகத்தில் இருந்த போது கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டிருந்தவர்... திராவிடர் முன்னேற்றக் கழகமானதும் ‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்“ என்றார். இன்று தி.மு.க பழனியில் முத்தமிழ் முருகனுக்கு விழா எடுக்கின்றது. மாநில சுயாட்சியின் முன்னேற்ற விரிவாக்கங்களில் ஒன்றாக... சுதந்திர தினத்தில் மாநிலங்களில் ஆளுநரே இந்தியக் கொடியை ஏற்றும் நிலைமை மாற்றி மாநில முதல்வர்களே கொடியை ஏற்றும் உரிமையை வென்றெடுத்தது தி.மு.க.

அப்படியே... வட அயர்லாந்துக்குச் செல்வோம்... வா. ஐ.ஆர்.ஏ. இயக்கம் தனிநாட்டுக்காக சுதந்திர வட அயர்லாந்துக்காகப் போராடியது. பிரித்தானிய இராச்சியத்தில் இருந்து பிரிய இரத்தம் சிந்தி உழைத்தது. இப்போது பிரித்தானிய இராச்சியத்துக்குள்ளேயே அதி உச்ச அதிகாரம் பெற்று தனக்கென நாடாளுமன்ற அதிகாரங்களைப் பெற்று பிரித்தானிய மாநில அரசொன்றாக ஒளிர்கின்றது.

ஆக... உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத நாட்டினுள்ளே அதி உச்ச அதிகாரம் பெறுவதே நம்போல் உள்ள மக்களின் விடுதலை என்பதை உன் உள்ளுணர்வு ஏற்கிறதா...? இல்லையா...?

இருப்பினும்... மாவீரர்களை, தேசியத் தலைவரை... சிங்கள அரசு செய்த இனஅழிப்பை... மறப்பதா...? மன்னிப்பதா...? மானம் கெட்டு வாழ்வதா...? என்றல்லவா உன் இரத்தம் சூடாகின்றது. “பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால்... சங்காரம் நிசமென்று... சங்கே முழங்கு“ என்ற வரிகள் உன்னைப் புல்லரிக்கச் செய்கின்றதல்லவா?

தம்பி... இந்தக் கவிதையால் புல்லரித்து நின்றவன் தான் நானும். அந்தப் புல்லரிப்புத் தேவைதான். அதனைக் காலச் சூழலுக்கேற்ப மாற்றுவதுதானே வளர்ச்சி. நமது வீரர்களை, தலைவரை இன்னும் சுதந்திரமாக உச்சரிக்கவும், கொண்டாடவுமான சூழலை அமைப்பதுதான் நன்றி உணர்ச்சி... காலத்

தேவை. அதைச் செய்ய மேலுள்ள உதாரணங்களை நம் வழிகாட்டு விவரங்களாக ஏன் கொள்ளக் கூடாது?

தொடர்ச்சி▼

# யார் இந்த பொது வேட்பாளர்? யார் இந்த சுமந்திரன்?




தொடர்ச்சி▲

நீ சுமந்திரன் மீதும், சாணக்கியன் மீதும் கோபம் கொண்டுள்ளாய் என்பது எனக்குத் தெரியும். இது உனக்கு ஊட்டப்பட்ட உணர்வுதான் என்பதை நான் அறிவேன். நீ... ஆழமாகச் சிந்தித்தால் இதனை... அந்தக் கோபத்தை... ஊட்டியவர்களின் உண்மை உருவைக் கண்டால் நிச்சயம் சுயத்துக்கு வருவாய். முதலில் பின்வருபவற்றுக்கு உன் விடைகள் எவை எனச் சொல்...

2009ல் போர் மௌனித்த கையோடு கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் இரவோடு இரவாக பேருந்துகளில் ஏற்றப்பட்டு வன்னிக் காடுகளில் இறக்கப் பட்டார்கள், கதியற்ற இவர்களுக்காக இலங்கை உயர் நீதி மன்று கட்டளை பிறப்பித்தது. அவர்களைப் பத்திரமா கப்... பாதுகாப்பாக.. இருந்த இடத்திலேயே... திரும்பவும் விடுக என்றது. இக்கட்டளையின் காரணகர்த்தா நீ வெறுத் திடும் அந்த சுமந்திரன் தான் என்பதை ஏன் மறந் தாய்?

2010ல் பயங்கரவாதத்தைத் தோற்கடித்த அரசு என்றும், 2011 இல் அதே மாதிரியேயும் இலங்கைக்கு மகுடம் தரித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் 2012 தொடக்கம் இன்றுவரை போர்க்குற்றம் புரிந்த நாடாகக் கண்காணித்து வருகின்றதே... இலங்கையை. இதன் காரணகர்த்தாக்கள் சம்மந்தன் ஐயாவும், சுமந்திரனும் தான் என்பதை மறந்துவிட்டாயா?

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை காணொலிக ளின் தொடக்கத்தைப் பார். நல்ல மழை... சாணக்கியனும், எண்ணக்கூடிய சிலரும் நனைந்தபடியே நடைபவனி தொடங்குகின்றார்கள். மறுநொடியே சுமந்திரன் சிற்றுந் தொன்றில் வந்திறங்குகின்றார். பவனி வேகம் கொள் கின்றது. முஸ்லிம் பிரமுகர்களும் கலக்கின்றார்கள். காத் தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, கிண்ணியா போன்ற முஸ் லிம் பிரதேசங்களும் பிரவாகத்தில் கலக்கின்றன. கோத் தாவையே மூக்கில் விரல் வைக்கச் செய்த இக் கைங்கரி யத்தின் காரணகர்த்தாக்களான சுமந்திரன் மற்றும் சாணக் கியன் மேல் உனக்கேன் கோபம் வருகின்றது?

நமது பிரச்சனையை "அரகலய" வுக்கும், வல்வெட்டித் துறையில் இருந்து காலி வரைக்கும் காவிச் சென்றவர்களை ஏன் புறந்தள்ள நினைக்கின்றாய்?

தம்பி... நல்லாட்சிக் கால நிகழ்வுகளை உன்னுள் முன் நிறுத்து. இவற்றின் காரணகர்த்தாக்களை நிறுத்துப் பார்... கையிலே நெய் இருக்க வெண்ணெய் தேடலாமா?

இவர்களைத் தலையிலே வைத்துக் கொண்டாடச் சொல்லவில்லை நான். மாறாகக் கேள்விகளைக் கேள்... விளக்கம் பெறு... விடை காண். நமது பிரச்சுனையை நமக் குச் சொல்ல... புலம்பெயர் நம் உறவுகளுக்குச் சொல்ல ஆள்கள் தேவையில்லை. அது நம் எல்லோருக்கும் தெரி யும். சிங்களத் தலைவர்களுக்கு... சிங்கள மக்களுக்கு... இராஜ தந்திரிகளுக்கு எடுத்துரைக்கும் ஆற்றல்... எப்படி எடுத்துரைப்பதென்ற நுட்பம் யார் யாரிடமெல்லாம் உண் டென ஆராய்ந்து பார்.

கட்சி என்ன முடிவெடுத்தது என்பதைக் கவனத்திற் கொள். கட்சியினராய் இருந்த போதும் கட்சிக்குள்ளே கருத்தாடல் செய்யாது வெளியே நின்று சொல்வதெல்லாம் வெற்றுரை என்று தெளிவு பெறு.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல்களின் வரலாற்றில் நமது விடயங்களை நகர்த்தக்கூடிய ஒருவருக்கே... நாம்... தமிழ் பேசும் மக்கள் வாக்களித்தோம். இருவரை வெல்ல வைத்தோம். அன்றாடப் பிரச்சனைகள் பலவற்றைச் சாதித் தோம். அரசமைப்பைத் தொடவிருந்த தருணங்களில் அவை நழுவின. அவர் கூட.. தேசியத் தலைவர் கூட... தான் விரும்பியவர் வரக்கூடியதாக தமிழ் மக்களை வாக்களிக் கச் செய்தார். அதன்... ஜனாதிபதித் தேர்தலின் முக்கியத்து வத்தை அவர் அப்படித்தான் விளக்க முடியும் என்பதனைப் புரியாதவனல்லவே நீ.

இவற்றையெல்லாம் ஆய்ந்து... கலந்துரையாடி நமது தமிழரசு தீர்மானம் எடுத்துள்ளது. அபிப்பிராயப்படி இருபத்தி ரண்டுக்கு ஐந்து தான். ஆனால், கட்சியின் தீர்மானம் என்ற வகையில் அனைவரும் ஏற்றனர். பொறுப்புணர்வோடு மத்திய குழுவில் பங்குபற்றாத அன்பர்கள் தான் பொறுப்பற்றுப் பேசுகின்றார்கள். இதனால்தான் குழம்புகின்றாய் நீ.

கட்சி தீர்மானித்து..போர் முடிந்த கையோடு சிங்களத் தளபதிக்கே வாக்களித்தவர்கள் நாம். இதில் இருந்த இராஜதந் திரத்தை நாம் அறிவோம், உலகம் நன்கறியும். இப்போ தும் ஆய்ந்தறிந்தே தீர்மானித்துள்ளது. கருத்து வேற்றுமை உண்டெனினும்..கட்சிக் கட்டுப்பாடல்லவா முக்கியம்?

கட்சிக் கூட்டத்துக்கு வராத கட்சித் தலைவரும் கூட, கூட்ட முடிவுக்குக் கட்டுப்படுவததான் முறை..சரி. ஜனநாயக நடைமுறை.

எனவே, தம்பி.. அறிவுடை நம்பி.. வரும் ஜனாதிபதித் தேர்தலில் தொலைபெசிக்கு வாக்களித்திடு.நம் பணியை அர்த்தமுள்ள அறிவுடமையோடு கூடிய தமிழ் உணர்வோடு தொடர்வோம்.

இப்படிக்கு,

**அண்ணாதாசன் கி.துரைராசசிங்கம்.**









- வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய -

# சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவில் அலையெனத் திரண்ட பக்தர்கள்

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் சமுத்திரத் தீர்த்தம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை பருத்தித்துறை – கற்கோவளம் கடற்பரப்பில் நடைபெற்றது. இந்தச் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவைக் காண பல பாகங்களிலும் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தனர்.

(படங்கள்:-ஜி.எல்.தர்ஷன்)











# சஜித்தையும் அநுரவையும் தும்புத்தடியால் ஓட ஓட அடித்துத் துரத்துங்கள்!

## தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளில் மேலும் பலரை விடுவிக்க நடவடிக்கை என்கிறார் ரணில்

(மன்னார் நிருபர்)

தமிழ், சிங்கள, முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்துடனே தான் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் முன் வந்துள்ளார் எனவும், கடந்த பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் துரிதமாக நியாயம் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்க கடினமான தீர்மானங்களை எடுக்க நேரிட்டதாகத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டு மக்கள் பொறுமை காக்கும் வேளையில், எதிர்க்கட்சியினர் அதிகாரத்தை மட்டுமே குறியாக வைத்து தேர்தல் கோரி போராட்டம் நடத்தியதையும் நினைவு கூர்ந்தார்.

மன்னார் பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று செவாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்ற "ரணிலால் இயலும்" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரமே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் எனவும், சஜித் மற்றும் அநுர கூறுவது போன்று உடன்படிக்கைகளை மீறி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது எனவும் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையை மக்கள் புரிந்து செயற்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லும் அதே வேளை, மன்னாரின் அபிவிருத்திக்காக அரசு முன்னெடுத்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி இங்கு எடுத்துரைத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"சிறந்த எதிர்காலத்தை நோக்கிச் செல்வதா அல்லது வரிசை யுகத்திற்குச் செல்வதா என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். இந்தத் தேர்தலில் எனது எதிர்காலமன்றி உங்களின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும். செப்டெம்பர் 21 ஆம் திகதி மிக முக்கியமான நாளாகும். உங்கள் திருமண தினத்தின் பின்னர் முக்கியமான நாள் இது.

இந்த நாடு நெருக்கடியில் இருந்தபோது சஜித்தோ அநுரவோ முன்வந்தார்களா? அவர்கள் எங்கிருந்தனர்? பொறுப்பேற்க முடியாது என்று அவர்கள் பின்வாங்கினார்கள். இன்று நாட்டில் அனைத்தும் இருக்கின்றன. பொருளாதாரம் முன்னேற ஆரம்பித்துள்ளது. மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். விவசாயம் செய்கின்றனர். கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

கஷ்டப்படும்போது வராமல் இப்போது தேர்தலுக்காக உங்களிடம் வந்திருக்கும் சஜித்தையும், அநுரவையும்

தொடர்ச்சி▼





# சஜித்தையும் அநுரவையும் தும்புத்தடியால் ஓட ஓட அடித்துத் துரத்துங்கள்!

## தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளில் மேலும் பலரை விடுவிக்க நடவடிக்கை என்கிறார் ரணில்

தொடர்ச்சி▲

தும்புத்தடியால் ஓட ஓட அடித்துத் துரத்த வேண்டும். வாயில் இருந்து உமிழ்நீர் வடிய வந்து தங்களுக்கு ஆணை தாருங்கள் என்று இருவரும் வெட்கமில்லாமல் கேட்கின்றார்கள்.

வரியைக் குறைப்பது ஐ.எம்.எப். நிபந்தனைக்கு முரணானது. சஜித்தும், அநுரவும் சொல்வதைப் போல தற்போதைய நிலையில் வரியைக் குறைத்தால் வருமானம் குறையும். நெருக்கடி ஏற்படும்.

இப்பகுதியில் மீன்பிடித்துறையை மேம்படுத்துவது குறித்து காதர் மஸ்தானுடன் கலந்துரையாடியுள்ளோம். அதனை நவீனமயப்படுத்துவோம். அவர் பெரிய கோரிக்கைப் பட்டியல் ஒன்றைத் தந்துள்ளார்.அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணத்தை ஒதுக்குவேன்.

மேலும், இந்தப் பகுதியை சூரிய சக்தி மையமாக மேம்படுத்துவதே எங்கள் நோக்கம். தெளிவான திட்டத்துடன் மக்களிடம் வந்திருக்கின்றேன். இந்தப் பிரதேசத்தில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து மக்களுக்கான வேலைத் திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துகின்றோம்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்த குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் பலரை விடுவிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். மன்னாரில் உள்ள சிங்களக் கிராமங்களில் வாழும் மக்கள் அஞ்சத் தேவையில்லை.

மன்னார் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட்டு, மன்னாரிலிருந்து திருகோணமலைக்கு புதிய பாதை அமைக்கப்படும். இப்பிரதேசத்தை நாம் முன்னேற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

காஸ் சிலிண்டருக்குச் செப்டெம்பர் 21 ஆம் திகதி வாக்களித்து ஆரம்பித்துள்ள பணியைத் தொடர மக்கள் ஆணையை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.” – என்றார்.









# கொழும்பில் இன்று விசேட போக்குவரத்து ஏற்பாடுகள்!

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடையவுள்ளன.

கிராண்ட்பாஸ், மருதானை, நுகே கொட, பிலியந்தலை மற்றும் கொட்டாவ ஆகிய பகுதிகளில் இன்று இறுதி பிரசாரக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன. இதனால் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிவு; தண்டனை நடவடிக்கைக்கு வலியுறுத்தல்!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் வட்ஸ்அப் செயலி மூலம் ஆசிரியர் ஒருவரால் பகிரப்பட்டதாகப் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பரீட்சை வினாத்தாள்களைப் புகைப்படம் எடுப்பது, காணொளியாகப் பதிவு செய்வது மற்றும் சமூக ஊடகங்களில் பதிவேற்றுவது போன்ற செயற்பாடுகள் திட்டமிட்ட குழுவொன்றினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குற்றஞ்சுமத்தியுள்ளார்.

கடந்த காலங்களிலும் இவ்வாறு பரீட்சை வினாத்தாள்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தன.

இவ்வாறான சம்பவங்கள் மாணவர்களின் உளநலத்திற்கு தீங்கு விளைவிக்கும் செயற்பாடாகும்.

இந்த விடயம் தொடர்பில் தெளிவானதொரு விசாரணையினை முன்னெடுத்துத் தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு பரீட்சைகள் திணைக்களத்திற்கு உள்ளது என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேர்தல் முறைப்பாடுகளை தெரிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள்



ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை தெரிவிப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு விசேட தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனூடாக, தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் வாக்கெடுப்பின் போதான சட்ட விரோதமான செயற்பாடுகள் தொடர்பில் அறிவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இராஜகிரிய தேர்தல் செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ பிரிவுக்கு இது தொடர்பான முறைப்பாடு அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு மக்களிடம் கோரியுள்ளது.

தொலைபேசி இலக்கங்கள்:
011 2796546, 011 2796549, 011 2796589, 011 2868153

பக்ஸ் இலக்கங்கள்:
011 2796533, 011 2796535, 011 2796537

வட்ஸ் அப் இலக்கம்:
070 5396999

இ மெயில்:
electiondr@gmail.com
pre2024@elections.gov.lk

பொலிஸ் பிரிவு:
011 2796536, 011 2796540, 011 2796544

# இன்று கடைசிப் பிரசாரக் கூட்டங்கள் பொதுமக்களுக்கு விசேட அறிவுறுத்தல்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடையவுள்ள நிலையில், கொழும்பு, நுகேகொடை மற்றும் பிலியந்தலை ஆகிய பகுதிகளில் பிரதான வேட்பாளர்களின் இறுதிப் பிரசாரக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரசாரக் கூட்டம், கிராண்ட்பாஸ் - பலாமரச் சந்தியிலும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பிரசாரக் கூட்டம் மருதானை - டவர் மண்டபத்துக்கு முன்பாகவும் இன்று பிற்பகல் இடம்பெறவுள்ளன.

அதேநேரம், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவின் கூட்டம் நுகேகொடை நகரிலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் பிரசாரக் கூட்டம் பிலியந்தலை பகுதியிலும் இன்று பிற்பகல் இடம் பெறவுள்ளன.

எனவே, இந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் இடம்பெறும் இடங்களை அண்மித்த வீதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்துக் கொள்வதற்கு மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் பொதுமக்களைக் கோரியுள்ளனர்.



# க்ளப் வசந்த கொலை; மேலும் ஒருவர் கைது!

க்ளப் வசந்தவின் கொலையுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபர் தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் அழுத்கம - தர்கா நகரில் வசிக்கும் 24 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

க்ளப் வசந்தவின் கொலைக்கென பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி ரவைகளில் KPI என்ற எழுத்துக்களைப் பதிவு செய்த செயற்பாடு மேற்படி சந்தேக நபரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வர்த்தக நிலையமொன்றில் உதவியாளராகச் செயற்படும் அவர் கடுவலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.



# பெருந்தோட்ட மக்கள் சொந்தக் காணிகளில் இருப்பதை பலரும் விரும்பவில்லை என்கின்றார் திகாம்பரம் எம்.பி.!

பெருந்தோட்ட மக்கள் சொந்தக் காணிகளில் இருப்பதைப் பலர் விரும்பவில்லை எனத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக வட்டவளை பகுதியில் நடத்தப்பட்ட பிரசார கூட்டத்தில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேர்தலில் தாம் வெற்றியடைவதை விடவும் சஜித் பிரேமதாஸவை தோல்வியடையச் செய்ய வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் இந்த சந்திப்பில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, டிக்கோயா பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கருந்துரைத்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களுடன் இருந்தவர்களே தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ளனர் என்று தெரிவித்தார்.



# மேல் மாகாணத்தில் அதிகளவில் பதிவாகும் டெங்கு நோயாளர்கள்

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 38,177 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

அதிகளவான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

அதன் குறித்த மாகாணத்தில் 15,973 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 9,481 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.



# 75 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் மீனவர் கைது

பேருவளைப் பகுதியில் மீனவர் ஒருவரின் வீட்டிலிருந்து 75 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது 50 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடலிலிருந்து மீட்கப்பட்ட பொதியொன்றிலிருந்தே மேற்படி ஹெரோயின் போதைப் பொருள் தமக்குக் கிடைக்கப் பெற்றதாகச் சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

# 2 ஆவது காலாண்டில் பொருளாதாரம் வளர்ச்சி

2024 ஆம் ஆண்டின் 2 ஆவது காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 4.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, 3 முக்கிய பொருளாதார நடவடிக்கைகள் சாதகமான பங்களிப்பை வழங்கியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வாராந்த பொருளாதார குறிகாட்டி தெரிவித்துள்ளது.

அதன்படி, விவசாய நடவடிக்கை 1.7 சதவீதமும், கைத்தொழில் நடவடிக்கை 10.9 சதவீதமும், சேவை நடவடிக்கைகள் 2.5 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளன.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் காணப்பட்ட வளர்ச்சி நிலைமையானது, தொடர்ந்தும் அவ்வாறு பேணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், 2ஆம் காலாண்டின் செயல்திறன் முதலாம் காலாண்டில் எட்டப்பட்ட 5.3 சதவீத வளர்ச்சியைவிட குறைவாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாதாள உலக கும்பலைச் சேர்ந்த ஒருவர் ரத்கம பிரதேசத்தில் கைது

பாதாள உலக செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் நாடளாவிய ரீதியில்கடந்த24மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாதாள உலக கும்பலைச் சேர்ந்த மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

ரத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போதுஇ பாதாள உலக கும்பலுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் எனக் கூறப்படும் மேலும் 15 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.



கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 4இ044பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.09.2024




இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறு பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிளில் கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மனநிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூடஎளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் உறுதி மற்றும் பொறுப்பு காரணமாக பணிகள் சுமூகமாக நடக்கும். திட்டமிடுவதன் மூலம் இது சாத்தியம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்துகொள்வீர்கள்.உன்கள் துணையை நட்கு புரிந்துகொண்டு நடந்து கொள்வீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத பண வரவுகள் இன்று சாத்தியம்.




சுய முயற்சியில் நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்று காணப்படும் மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

பணி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும். நம்பிக்கையுடன் அதனை எற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பீர்கள். எனவே செயல்கள் யாவும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணையும் உங்கள் அன்பை புரிந்துகொண்டு நடப்பார். இதனால் உறவில் திருப்தி நிலவும்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அந்தப் பணம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். யோகா அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது.




நல்ல சிந்தனை மூலம் சிறப்பான செயல்களுக்கு முயற்சி செய்வீர்கள். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும் சக பணியாளர்களுடன் சிறந்த முறையில் கலந்து பழகுவதன் மூலம் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் தகவல் பரிமாற்றத்தில் இடைவெளி காணப்படும். இதனால் இருவருக்கும் இடையிலான புரிந்துணர்வு பாதிப்படையும். எனவே இதனை தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் சம்பாதிப்பது கடினமாக காணப்படும். சிறந்த முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




சில சமயங்களில் அமைதியின் மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களை செய்யுங்கள். பொறுமை யான அணுகுமுறை மேற்கொண்டால் சிறந்தது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மேலதிகாரி களுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும். சில குடும்ப பிரச்சினை காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் விறைப்புத் தன்மை உங்களுக்கு கவலையை அளிக்கும்.




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக் கும். நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடத்தில் நல்ல பலன்கள் காணப்படும். மேலதிகாரிகளின் ஆதர வைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனுள்ள முதலீடுகளை செய்யுங்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் இருக்கும். உடற்பயிற்சி மூலம் நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.




பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மன ஆறுதலை அளிக்கும். விவேகமான அணுகுமுறை மேற் கொள்வது நல்லது.

பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. சிறந்த திட்டமிடல் மூலம் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவை பராமரிக்க அத்தகைய வன்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

பண வரவு சுமாராக இருக்கும். கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று உறுதியுடன் இருக்க வேண் டிய நாள். நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் கவனமாக ஆற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும். சக பணியாளர்களுடன் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் இன்று அமைதியிழந்து உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். எனவே இதனை தவிர்த்து அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாளவும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளை உட்கொள்ள வேண்டாம். மன உளைச்சலுக்கு இடம் அளிக்காதீர்கள்

# இன்றைய ராசி பலன்கள் - 18.09.2024




ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இதுவே உங்களின் எதிர்கால போக்காக ஆகிவிடும்.

உங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் சில தருணங்களைக் காண்பீர்கள். எனவே முன் ஜாக்கிரதையாக விழிப்புடன் அதனை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்.

உங்கள் துணையிடம் தேவையின்றி உணர்ச்சி வசப்படுவீர்கள். எனவே உங்களின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். செலவுகளை கட்டுபடுத்தும் வகைகளை கண்டறிய முயல வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் பதட்டங்களை கட்டுப்படுத்தினால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் எளிதில் நிறைவேறும்.

பணியிடத்தில் முன்னணியில் இருப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் மற்ற ஜோடிகளுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

எதிர்பாராத பண வரவு காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். கவனமாக திட்டமிட வேண்டும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. உடற்பயிற்சி மேற்கொண்டால் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம்.




இன்றைய நாள் உற்சாகமான மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.எனவே மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் முன்னேற்றங்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

குடும்பத்தை அனுசரித்துப் போவதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கலாம். மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

இன்று உங்கள் சேமிப்பின் மூலம் பண வரவு காணப்படும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாத வரையில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிந்திப்பதை நிறுத்தி விட்டு செயல்களில் ஈடுபடுங்கள்.




இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். சுலோகம் சொல்வது மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இது சாத்யம்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்காது. அதிகமான பணிகள் உங்களுக்கு கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை காரணமாக அமைதியின்மை காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே ஒன்றாக அமர்ந்து பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி மற்றும் முதுகு வலி காரணமாக பதற்றம் ஏற்படலாம்.




